அனுப்புவதில் பயனில்லை. துப்பாக்கியை அனுப்ப வேண்டியதுதான்.

லூஷிங் : ஆம். மயிலே மயிலே இறகு போடு என்ற கதை இந்த மருது பாண்டியனிடம் பலிக்காதுதான்.

(இந்தச் சமயத்தில் சிப்பாய் - 1 ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து லூஷிங்டனிடம் கொடுக்கிறான்.

சிப். 1 : (கொடுத்துவிட்டு) கலெக்டர் ஸாப்! ஏதோ அவசரக் கடிதம். பாளையங்கோட்டையிலிருந்து இப்போதுதான் நமது படைவீரன் ஒருவன் கொண்டுவந்தான்.

லூஷிங் : சரி, நீ போகலாம். (கடிதத்தைப் படித்து முடித்து விட்டுத் திடுக்கிட்டவனாக) ஆ! தப்பிவிட்டார்களா?

வெல்ஷ் : யார் - யார் தப்பிவிட்டார்கள்?

லூஷிங் : பாளையங்கோட்டைச் சிறையில் அடைபட்டுக் கிடந்த அந்தப் பாஞ்சாலங்குறிச்சிப் பயல்கள்தான். ஊமைத்துரையும் அவன் சகாக்களும் சிறையை உடைத்துக்கொண்டு ஓடிவிட்டார்களாம். அதுமட்டுமல்ல. ஓடிப்போய் ஆயிரக் கணக்கான மக்களைத் திரட்டிக்கொண்டு மீண்டும் போருக்குச் சித்தமாகி விட்டார்களாம்!

வெல்ஷ் : புதிய தலைவலிதான், லூஷிங்டன்! இந்தத் தென்னாட்டுப் பாளையக்காரர்களே நம்மிடம் லேசில் பணியமாட்டார்கள் போலிருக்கிறது.

லூஷிங் : கர்னல் வெல்ஷ்! எதிரியாயிருந்தால் அவன் நம்மிடம் கும்பிட்டு அடிபணிய

வேண்டும்; இல்லையேல் அவன் கொல்லப்பட வேண்டும். நிபந்தனையற்ற சரணாகதி; இல்லையேல், நிர்த்தாட்சணியமான மரண தண்டனை. இதுதான் நமது யுத்த தர்மம். தெரிந்துகொள்ளும்.

**வெல்ஷ்** : ஆம், லூஷிங்டன்! ஊமைத்துரை உயிரோடிருக்கும் வரையில் நமக்கு நிம்மதியே கிடையாது. அன்றே நாம் அவனையும் கொன்றிருக்க வேண்டும். பாம்பைக் குடத்தில் பிடித்தடைத்தால், என்றைக்காவது ஒருநாள் நம்மை அது கொத்த வரத்தான் செய்யும்!

**லூஷிங்** : தவறுதான். அதன் பலன்தான் இந்த விளைவு. சரி, நீர் போய்வாரும். பாஞ்சாலங்குறிச்சிப் போர்முனை விஷயத்தை நான் உடனே கவனித்தாக வேண்டும். மருதுபாண்டியன் மீது தங்களுக்கு ஒரு கண் இருக்கட்டும்.

**வெல்ஷ்** : சரி, ஆகட்டும் லூஷிங்டன். நான் வருகிறேன்.

(சலாமிட்டுவிட்டு வெல்ஷ் செல்கிறான்).

- திரை -

## காட்சி – 22

இடம் : (சிறுவயல்) அரண்மனை.

பாத்திரங்கள் : சின்ன மருது, வெள்ளை மருது, ஊமைத் துரை, சிவத்தையா, சேவகர்கள் 1, 2.

(மருது சகோதரர்கள் இருவரும் அமர்ந்திருக்கும்போது சேவகன் 2 வருகிறான்).

சேவ. 2 : சின்ன மகாராஜா! அவர்கள் இங்கு வந்துவிட்டார்கள்.

சின்ன : வந்துவிட்டார்களா? மிக்க மகிழ்ச்சி. சரி, அவர்களை ராஜ கௌரவத்தோடு இங்கு அழைத்து வாருங்கள்.

சேவ. 2 : உத்தரவு மகாராஜா.

(செல்கிறான்).

வெள்ளை : தம்பி சின்ன மருது, யார் வந்திருக்கிறார்கள்? ராஜ கௌரவத்தோடு அழைத்து வரவேண்டிய அவர்கள் யார்?

சின்ன : ஆம் அண்ணா. அவர்களும் நம்மைப் போன்ற தேசாதிபதிகள்தான். பாஞ்சாலங்குறிச்சி வீரர் ஊமைத்துரையும் அவரது தம்பி சிவத்தையாவும்.

வெள்ளை : (ஆச்சரியத்தோடு) என்ன, பாஞ்சை வீரர் ஊமைத்துரை இங்கு வந்திருக்கிறாரா?

சின்ன : ஆம் அண்ணா. நமது உதவியையும் ஒத்துழைப்பையும் நாடி வந்திருக்கிறார்கள்.

இடிமேல் இடி விழுந்த மாதிரி அவர்களுக்கு மேலும் மேலும் துன்பங்கள்தான் நேர்ந்து வருகின்றன. அந்தக் கொள்ளைக்கார வெள்ளையர்கள் அவர்களை உயிரோடு விட்டு வைக்கவே விரும்பவில்லை. அவர்களை நாலா திசைகளிலும் வேட்டையாடித் திரிகிறார்கள்.

**வெள்ளை** : சரி, இங்கு எப்படி வந்துசேர்ந்தார்கள்?

**சின்ன** : அதுவா? ஊமைத்துரையும் அவரது சகாக்களும் திருமயத்துக்கு வந்து தலைமறைவாய் இருந்து கொண்டு, எனக்குத் தகவல் சொல்லி அனுப்பினார்கள். நான்தான் அவர்களைத் தக்க பாதுகாப்புடன், இங்கு - நமது சிறுவயல் நகரத்துக்கு அழைத்துவருமாறு ஆளனுப்பினேன். அதோ - அவர்களும் வந்துவிட்டார்கள்.

**(ஊமைத்துரையும் சிவத்தையாவும் வந்துசேர்கிறார்கள்).**

**சின்ன** : (வந்தவர்களை எழுந்து வரவேற்று) வீர பாண்டியக் கட்டபொம்மனின் வீரத்தம்பிகளே! வாருங்கள், வாருங்கள்.

**ஊமை** : மருது சகோதரர்களே! வணக்கம்.

**வெள்ளை** : (பதிலுக்கு வணங்கி) வாருங்கள் தம்பி, இப்படி அமருங்கள். அதோ உங்களுடன் வந்திருக்கும் வீரன் யார்? இவர்தான் தம்பி சிவத்தையாவோ?

**ஊமை** : (அமர்ந்துகொண்டே) ஆம், மருதுபாண்டியரே இவன் என் தம்பி சிவத்தையாதான்.

சிவத் : வணக்கம் மகாராஜா.

வெள்ளை : நீங்களும் அமருங்கள் தம்பி.

(சிவத்தையாவும் ஊமைத்துரையின் அருகில் அமர்கிறான்).

சின்ன : ஊமைத்துரை அவர்களே! தங்கள் வரவு கண்டு நான் பேரானந்தம் அடைகிறேன். என்றாலும் தங்களை நான் இந்தக் கோலத்தில் காண்பதை எண்ணும்போது மனம் வேகிறது நண்பரே, வேகிறது!

ஊமை : சின்ன மருது பாண்டியரே! எல்லாம் காலத்தின் கோலம். நாங்கள் நம்பிவந்த எங்கள் குலதெய்வம் சக்கதேவியே எங்களைக் கைவிட்டுவிட்டாள்.

சின்ன : ஆனால் நாங்கள் உங்களை என்றும் கைவிட மாட்டோம். நட்புரிமை பாராட்டிவந்த கட்டபொம்மனை நயவஞ்சகமாய்க் காட்டிக் கொடுத்த புதுக்கோட்டைத் தொண்டைமான் அல்ல நாங்கள். அல்லது இனத்தான் என்று கூடப் பாராமல் உங்களுக்கு எதிராகச் செய்த எட்டயபுரத்தானும் அல்ல நாங்கள். எங்களை நீங்கள் நிச்சயம் நம்பலாம். இதை உறுதியாய்க் கொள்ளுங்கள். நம்பிக்கைத் துரோகம் செய்யும் வர்க்கத்தில் பிறந்தவர்கள் அல்ல நாங்கள்!

ஊமை : அதைத் தெரிந்துதானே தங்களிடம் வந்திருக்கிறேன்.

வெள்ளை : பாஞ்சை வீரரே! தாங்கள் இங்கு எப்படி வந்து சேர்ந்தீர்கள்?

**ஊமை** : மருதுபாண்டியரே! நாங்கள் பாளையங் கோட்டைச் சிறையிலிருந்து தப்பி வந்து, மீண்டும் பாஞ்சாலங்குறிச்சியிலே கோட்டை எழுப்பிப் போரிட்டதை யெல்லாம் தாங்கள் அறிவீர்கள். ஆனால் போரில் எங்களுக்குத் தோல்விதான் காத்து நின்றது. கோட்டை பிடிபட்டவுடனேயே நானும் எனது வீரர்கள் சிலரும் வெள்ளையர் களிடம் பிடிபடாமல் எப்படியெப்படியோ தப்பித்து வந்துவிட்டோம். தப்பித்து எத்தனையோ இன்னல்களையும் இடைஞ்சல்களையும் அனுபவித்து எப்படியோ இங்கு வந்து சேர்ந்தோம் ஆனால் அந்த வெள்ளைப் பிசாசுகளோ எங்கள் ரத்தத்தைக் குடிப்பதற்காக நாலா திசைகளிலும் வலைவிரித்துத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில்தான் நாங்கள் இங்கு வந்து சேர்ந்திருக்கிறோம்.

**சின்ன** : பாஞ்சை வீரரே! இனி உமக்கு எந்தக் கவலையும் வேண்டாம். தகுந்த பாதுகாப்பான இடத்துக்குத் தான் வந்துசேர்ந்திருக்கிறீர்கள்.

**ஊமை** : ஆனால்..? என்னால் உங்களுக்குத்தானே தொல்லைகள் விளையும்? நாடு நகரத்தை இழந்து, உற்றார் உறவினரை இழந்து அகதிகளைப்போல் வந்துள்ள எங்களை ஆதரிப்பதால் உங்களுக்கும் அல்லவா ஆபத்து?

**சின்ன** : நடந்ததை எண்ணியெண்ணி மறுக வேண்டாம், ஊமைத்துரையே! இனி நடக்க வேண்டியதை எண்ணுவோம்.

இதோ இனி எங்கள் நாடுதான் உங்கள் நாடு. எங்கள் உற்றாரே உங்களுக்கும் உற்றார். அதுமட்டுமல்ல. பாஞ்சை வீரரே! உங்களுக்கு எதிரிகளாயிருப்பவர்கள் எங்களுக்கும் எதிரிகள்! எனவே நாம் ஒன்றுகூடுவது நமது பலத்தை அதிகரிக்குமே தவிர, பலத்தைக் குறைத்து விடாது. கவலையை விடுங்கள்.

**வெள்ளை** : தம்பி சின்ன மருது, பாஞ்சைப்பதி வீரர்கள் நம்மிடத்தில் வந்து சேர்ந்து விட்டார்கள் என்பதை வெள்ளையர்கள் அறிந்தால், நாளையே அவர்கள் நம்மீது போர் தொடுக்கவும் கூடும்.

**சின்ன** : ஏன் அண்ணா? இன்றே வேண்டுமானாலும் அவர்கள் போர் தொடுக்கட்டுமே! வருகின்ற போர் இன்று வந்தால் என்ன, நாளை வந்தால் என்ன? அண்ணா! நம்மிடம் இப்போது இருபதினாயிரம் போர் வீரர்கள் இருக்கிறார்கள். எந்தக் காளையார் கோயில் போரில் நாம் முதன் முதல் தோற்க நேர்ந்ததோ, அதே காளையார் கோயில் காட்டுக்குள்ளே இந்த வெள்ளையர் கும்பலை நான் சணக்காடு பிணக்காடாக வெட்டித் தள்ளுகிறேன். வரட்டும் அந்த வெள்ளையர்கள்!

**சேவ. 1** : (ஓடிவந்து) மகாராஜா! ஒற்றன் ஒருவன் அவசரச் செய்தி கொண்டுவந்திருக்கிறான்.

**சின்ன** : வரச்சொல் அவனை!

**சேவ. 1** : உத்தரவு மகாராஜா!

(செல்கிறான். ஒற்றன் உள்ளே வருகிறான்).

ஒற்றன் : மகாராஜா! ஆபத்தான செய்தி. வெள்ளையர்கள் பெரும் படையோடு நமது சீமையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைப் பிடித்த அதே அக்கினிச் சென்னல்தான் தலைமை தாங்கிவருகிறான். சிறுவயல் நகரத்தை நோக்கித்தான் அந்தப் படை முன்னேறி வருகிறது.

சின்ன : அண்ணா! தங்கள் வார்த்தை உண்மையாகி விட்டது. இனித் தாமதிப்பதில் பயனில்லை. (உள்ளே திரும்பி) யாரடா சேவகா! உடனே போர் முரசு அறையச் சொல். ம், சீக்கிரம்! (அண்ணனிடம் திரும்பி) அண்ணா! இனி நீங்கள் அனைவரும் இங்கிருப்பது சரியல்ல. நீங்கள் எல்லோரும் காளையார் கோயில் காட்டுக்குள் சென்று அரணைப் பலப்படுத்துங்கள். யுத்தத்தை எதிர்பார்த்தே நான் காளையார் கோயில் அரணுக்குள்ளே ஏராளமான உணவுப் பொருளையும் ஆயுதங்களையும், வெடி மருந்தையும் சேமித்து வைத்திருக்கிறேன். வெள்ளையர்கள் நம்மைச் சுற்றிவளைத்து எத்தனை நாட்கள் முற்றுகையிட்டாலும் சரி, நமக்குக் கவலையே இல்லை. சரி, நீங்கள் சீக்கிரமே புறப்படுங்கள்.

வெள்ளை : தம்பி, நீ -

சின்ன : என்னைப் பற்றிய கவலை தங்களுக்கு வேண்டாம். அண்ணா! வெள்ளையர்களை எதிர்த்துத் தாக்கும் முன்னணிப் படைக்கு நானே தலைமை தாங்கப் போகிறேன்.

**ஊமை** : சின்ன மருது பாண்டியரே! உம்மைத் தனியாக விட்டுவிட்டு நான் மட்டும் செல்வதா? நானும் தங்களுக்குத் துணை நிற்கிறேனே.

**சின்ன** : ஊமைத்துரை அவர்களே! தங்களைக் காப்பதுதான் என் கடமை. எனவே என் சொல்லைத் தட்டாமல் உடனே காளையார் கோயிலுக்குப் புறப்படுங்கள். அண்ணா! இனி ஒரு கணம்கூட நீங்கள் இங்கு தாமதிக்கக்கூடாது. சீக்கிரமே புறப்பட்டுச் செல்லுங்கள். நான் வருகிறேன். நமது படை வீரர்களைச் சந்தித்துவிட்டு வருகிறேன். பிறகு சந்திப்போம் - காளையார் கோயிலில்!

(சின்ன மருது அவசர அவசரமாக வெளியேறுகிறான்).

- திரை -

## காட்சி - 23

**இடம்** : கோட்டைவாசல்

**பாத்திரங்கள்** : சின்ன மருது, சேவகர்கள், ஊர் மக்கள், கிராமவாசிகள், முரசறைபவன் - 1.

(முரசடிப்பவன் முரசைப் பலங்கொண்ட மட்டும் அடிக்கிறான். முரசொலி கேட்டுச் சேவகர்களும், கிராமவாசிகளும், ஊர்மக்களும் அங்குக் கூடுகிறார்கள். சின்ன மருது யுத்தக் கோலத்தில் அங்கு வந்து ஜனங்களை நோக்கிப் பேசத் தொடங்குகிறான்).

சின்ன : சிவகங்கைச் சீமைபெற்றெடுத்த செல்வங்களே! மறக்குடிப் பெருமக்களே! படைவீரர் பட்டாளமே நம்நாடு இப்போது பேராபத்தில் இருக்கிறது. கடல் கடந்து வந்த கொள்ளைக்கார வெள்ளையர்கள் நம்மைக் கட்டியாளத் திட்டமிட்டுவிட்டார்கள்; நமது தாய்நாட்டின் உரிமையை, சிவகங்கைச் சீமையின் சுதந்திரத்தைத் தட்டிப் பறிக்கத் துணிந்துவிட்டார்கள். வெள்ளையர்களின் இந்த அநியாயத்தையும் ஆதிக்க வேட்கையையும் இன்னும் அனுமதிக்கப் போகிறீர்களா?

எல்லா : (கோஷமாக) இல்லை! இல்லை.

சின்ன : ஆம், அனுமதிக்கமாட்டீர்கள். உங்கள் உடல் பொருள் ஆவி அனைத்தையும் கொடுத்தேனும் உங்கள் தாய்நாட்டை, நீங்களும் உங்கள் மூதாதையர்களும் பிறந்து வளர்ந்து, வாழ்ந்து சிறந்த இந்தப் பொன்னாட்டை, உங்களது உழைப்பாலும் ஊக்கத்தாலும் உருப்பெற்ற இந்தத் தாயகத்தை, நீங்கள் காப்பீர்கள். உங்கள் சீமையைக் காப்பீர்கள்; உங்கள் மன்னனைக் காப்பீர்கள்; நாட்டின் மானத்தைக் காப்பாற்றுவீர்கள். படை வீரர்களே! வெள்ளையர் படை நமது சிறுவயல் நகரத்தை நோக்கி நெருங்கி வந்துகொண்டே இருக்கிறது. இவர்களை ஒரு அடிகூட முன்னேற விடாமல் எதிர்த்துத் தாக்குங்கள். தந்திரமாக மறைந்துநின்று தாக்குங்கள்! வெட்டித் தள்ளுங்கள்! சுட்டுக் கொல்லுங்கள்! ரத்தவெறி பிடித்த வெள்ளையர்கள்

தாங்கள் சிந்தும் ரத்த வெள்ளத்திலே மூழ்கிச் சாகட்டும்!

எல்லா : (கோஷமாக) வெள்ளையனை விடமாட்டோம்! விடமாட்டோம்!

சின்ன : ஆம், விடமாட்டீர்கள். ஆனால் பொதுமக்களே! போர் வீரர்களே! எதிரிகளின் பலம் ஒன்றும் இழிவானதல்ல; பலம் வாய்ந்த எதிரிகள் அவர்கள். எனவே அவர்களைத் தடுத்து நிறுத்த முடியாது போனால், சிறுவயல் நகரத்தைப் பாதுகாக்க முடியாது போனால், சிறுவயல் நகரத்தையே சுட்டுப் பொசுக்குங்கள். எதிரியின் கையில் நம்முடைய எந்த ஒரு உடைமையும் கிட்டாதவாறு சிறுவயலைச் சுடுகாடாக்குங்கள். பின்னர், காளையார் கோயில் காட்டுக்குள் வந்துசேருங்கள். காளையர் கோயில் காட்டுக்குள்ளேயே வெள்ளையர்களுக்குச் சமாதி கட்டுவோம். சிறுவயலைச் சுடுகாடாக்கிய பழியை, காளையார் கோயில் காட்டை வெள்ளையருக்கு இடுகாடாய் ஆக்குவதன் மூலம் கழுவித் துடைப்போம். புறப்படுங்கள் போருக்கு. முன்னேறிச் செல்லுங்கள்; முனைந்து நின்று தாக்குங்கள். வாழ்க சிவகங்கை!

எல் : வாழ்க சிவகங்கை! வாழ்க மருதுபாண்டியர்!

**(சின்ன மருது செல்கிறான்).**

**- திரை -**

## காட்சி - 24

**முன்னணிக்காட்சி** : பின்னணியில் முரசொலி; பின்னர் துரித கதியில் ஒலிக்கும் பம்பை வாத்திய ஓசை. சட்டென்று அதனை வெட்டி முறித்து ஒலிக்கும் இராணுவ பாண்டு வாத்தியம். மீண்டும் பம்பை ஒலி; மீண்டும் இராணுவ பாண்டு வாத்திய ஒலி. வாட்கள் மோதும் சப்தம்; வெடிச் சப்தம். இவற்றுடன்,

"மாரோ! மாரோ!"
"விடாதே! வெட்டு!"
"By St. Geroge! Charge!"

முதலிய போர்க் குரல்கள்.

"காளேஸ்வரா!"
"அரே! அல்லா!"
"Oh! My Lord!"

என்ற அவலக்குரல்கள். திசையிலே ஒரே புகைமண்டலம். போர் புரியும் குழப்பக் காட்சி. பின்னர் திடீரென்று அந்த வெண்திரை செந்நிறமாக மாறுகிறது. புகைமண்டலம் அதிகரிக்கிறது. சிறுவயல் நகரம் தீப்பிடித்து எரியும் காட்சி திரையில் தெரிகிறது. தீப்பிழம்புகள்! புகைச் சுருள்கள்! மனிதர்களின் கூக்குரல்கள்!)

- திரை -

## காட்சி – 25

**இடம்** : காட்டுக்குள் உள்ள கூடாரத்தின் வெளிப்புறம்.

**பாத்திரங்கள்** : கர்னல் வெல்ஷ், ஜெனரல் ஆக்னியூ.

(ஆக்னியூ நிலைகொள்ளாமல் அங்குமிங்கும் நடக்கிறான். வெல்ஷ் ஒரு பக்கமாக நிற்கிறான்).

**ஆக்னியூ** : (அலைந்துகொண்டே) கர்னல் வெல்ஷ்! நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்றே தெரியவில்லையே. பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைப் பிடிக்க நடந்த போரில்கூட, நான் இவ்வளவு சிரமப்படவில்லையே. இந்த மருது பாண்டியனை வெற்றிகொள்ளும் மார்க்கமே புலப்படவில்லையே. என்ன செய்வது?

**வெல்ஷ்** : ஜெனரல் ஆக்னியூ! அதைத்தான் நானும் யோசிக்கிறேன். எதிரிகள் பின்வாங்குகிறார்கள் என்று நம்பியதுதான் பிசகாகிவிட்டது. சிறுவயல் நகரத்தைச் சுட்டுப் பொசுக்கிவிட்டு, காட்டுக்குள் வந்து ஒளிந்துகொண்டவர்களை லகுவில் பிடித்து விடலாம் என்று எண்ணி, நாம்தான் ஏமாந்து விட்டோம். காட்டில் இப்போது அவர்கள் சிக்கிக் கொள்ளவில்லை. நாம்தான் சிக்கிக்கொண்டு விட்டோம்.

**ஆக்னியூ** : ஆம், மிஸ்டர் வெல்ஷ். நாம்தான் அகப்பட்டுக் கொண்டோம். இந்தக் காட்டுப் போர்முறையே நமக்குப்

புரியவில்லை. சிறுவயலுக்கும் காளையார் கோயில் அரணுக்கும் உள்ள தூரம் என்னவோ ஏழே ஏழு மைல்தான். எனினும் இரண்டு மாதங்களாக, அறுபது நாட்களாகப் போராடியும் நம்மால் இந்த ஏழு மைல் தூரத்தை எட்டிப் பிடிக்க முடியவில்லை. இது நமக்கே வெட்கக் கேடு. நமது ராணுவத்துக்கே பெருத்த அவமானம். இந்த எதிரிகள் எங்கிருந்து, எப்படி வந்து தாக்குகிறார்கள் என்பதே புரியவில்லை.

**வெல்ஷ்** : ஜெனரல்! இதே நிலைமை இன்னும் சிலநாட்கள் நீடித்தால் நமது படையிலுள்ள கறுப்புச் சிப்பாய்கள் எந்த நேரத்தில் கலகம் செய்வார்கள் என்று சொல்லமுடியாது. இரவுபகலாய் அவர்கள் மழையிலும் சேற்றிலும் குளிரிலும் கிடந்து தவிக்கிறார்கள். அவர்களுக்குச் சரியான உணவு கூடக் கிடைக்கவில்லை. யுத்தத்தால் ஏற்பட்ட ஆள்தேசம் போதாதென்று நோய் நொடியாலும் நமது படையினர் செத்துவருகிறார்கள். இங்கிருந்து வெளியே செய்தி அனுப்பவும் முடியவில்லை; வெளியிலிருந்து நமக்குத் தேவையான ஆயுதங்களும் உணவுப் பொருளும் வந்து சேர்வதற்குக்கூட மார்க்கமில்லை.

**ஆக்னியூ** : ஆம், மிஸ்டர் வெல்ஷ்! நிலைமை மிகமிக ஆபத்தானதாகத்தான் இருக்கிறது. எந்தவிதமான நம்பிக்கையும் முன்னேற்றமும் இன்றி, நித்தம் நித்தம் செத்துக்கொண்டிருந்தால் படைவீரர்கள் ஏன் சோர்வடைய மாட்டார்கள்? பதயத்துக்குள் சிக்கிய எலியைப்போல்

நாம் இங்கு வசமாகச் சிக்கிக்கொண்டு விட்டோம். முன்னும் போக வழியில்லை, பின்னும் போக முடியவில்லை. படையெடுப்பைக் கைவிட்டுவிடலாமா என்றுதான் யோசிக்கிறேன்.

வெல்ஷ் : அதற்குள் முடிவுகட்ட வேண்டாம், ஜெனரல் ஆக்னியூ. எதற்கும் தாங்கள் ராமநாதபுரம் சென்று நமது கலெக்டர் லூஷிங்டனைச் சந்தியுங்கள். இன்றோ நாளையோ அவரைச் சந்தித்து ஆலோசனை செய்யுங்கள்.

ஆக்னியூ : அதுவும் நல்ல யோசனைதான். அப்படியானால் நான் இன்றிரவே சென்று திரும்ப ஏற்பாடுகளைச் செய்யுங்கள். எதிரிகள் எல்லாத் திசைகளிலும் இருக்கிறார்கள். ஜாக்கிரதை! Be Careful!

வெல்ஷ் : ஆகட்டும் ஆக்னியூ, தங்கள் பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிக்கிறேன். சரி, நான் வருகிறேன் ஜெனரல்.

(ஆக்னியூவுக்குச் சலாபமிட்டுவிட்டு வெல்ஷ் செல்கிறான்)

- திரை -

## காட்சி - 26

இடம் : (இராமநாதபுரம்) அரண்மனை

பாத்திரங்கள் : லூஷிங்டன், அக்னியூ.

(காட்சி ஆரம்பத்தில் ஆக்னியூ குனிந்த தலையோடு நிற்கிறான். ஆத்திரத்தோடு அங்குமிங்கும் நடைபோட்டுக் கொண்டிருந்த லூஷிங்டன் திடீரென்று உரத்த குரலில் கத்துகிறான்).

லூஷிங் : (ஆத்திரத்தோடு) ஜெனரல் ஆக்னியூ! படையெடுப்பைக் கைவிட்டுவிடலாமா என்று கேட்கிறீரே! உமக்கே வெட்கமில்லை?

ஆக்னியூ : மிஸ்டர் லூஷிங்டன்! வெட்கப்படத்தான் செய்கிறேன். ஆனால் நிலைமை என்னவோ அதுதான். எதிரிகள் மாயமாக மறைந்துநின்று தாக்குகிறார்கள். இந்தக் காட்டுப்போருக்கு நமது துருப்புக்கள் லாயக்கே இல்லை. தோட்டாக் களையும், துப்பாக்கிகளையும் கொண்டுமட்டும் காட்டுக்குள் ஊடுருவிவிட முடியாது. மேலும் மேலும் நமக்குத்தான் சேதமே தவிர, வெற்றி என்னவோ அவர்களுக்குத்தான். காட்டுக்குள் செல்லும் பாதையே தெரியவில்லை. கண்ணைக்கட்டி விட்டாற்போலிருக்கிறது.

லூஷிங் : பாதையைக் காட்டிக்கொடுக்க ஒரு துரோகி கூடவா அகப்படவில்லை?

ஆக்னியூ : ஒருவன் அகப்பட்டான். ஆனால் அவர்கள் அவனையும் வழிமறித்துக் கொன்று விட்டார்கள் லூஷிங்டன்! இந்தப் போரில் நாம் வெற்றிபெற முடியாததற்குக் காரணம் நமது போர்முறையின் பலவீனம் மட்டும் அல்ல. மருதுபாண்டியனின் படைகள் மட்டும் நம்மைத் தாக்கவில்லை; நாட்டு மக்கள் அனைவருமே அவனோடு ஒத்துழைக்கிறார்கள். மக்களும் மன்னனும் ஒன்று சேர்ந்து நிற்கும் வரையில் நம்மால் எதுவுமே செய்யமுடியாது.

பொறுக்கி எடுத்த சிப்பாய்களேயானாலும், பொது மக்கள் திரண்டு எழுந்து தாக்கினால் அவர்களால் சமாளிக்க முடியுமா? அதில்தான் சங்கடம் இருக்கிறது.

லூஷிங் : பின்னே என்னதான் செய்ய வேண்டும் என்கிறீர்?

ஆக்னியூ : மக்கள் மன்னனை எதிர்த்தால்தான், மக்களுக்கும் மன்னனுக்கும் இடையே பிளவை உண்டாக்கினால் தான் நாம் வெற்றி காண முடியும். ராணுவ தந்திரம் மட்டுமல்ல, ராஜதந்திரமும் நமக்குத் தேவை. வேறு வழியே இல்லை.

லூஷிங் : வாஸ்தவம்தான். மக்கள் அவன் பக்கம் நிற்கும் வரை அவனை நாம் அசைக்க முடியாதுதான். பிறகு - (ஆலோசித்தவாறே அங்குமிங்கும் நடக்கிறான். பின்னர் திடீரென்று ஒரு வழியைக் கண்டுவிட்ட உற்சாகத்தோடு) - ஆம். ஆனால், அதற்கும் ஒரு வழியிருக்கிறது ஆக்னியூ.

ஆக்னியூ : என்ன வழி, கலெக்டர் ஸார்?

லூஷிங் : வழியா? சிவகங்கைச் சீமையின் வாரிசுரிமைப் பாத்தியதையை வைத்துத்தான் மக்களைப் பிளவு படுத்த வேண்டும். கேளும், காலஞ்சென்ற முத்து வடுகநாதனும் சரி, அவன் மனைவி வேலு நாச்சியாரும் சரி, இரண்டுபேரும் மறவர் குலத்தவர்கள். மருதுபாண்டியனோ சேர்வைக் காரன்; அகம்படியன். எனவே சிவகங்கையின் அரசுரிமை மறவனுக்கா, இல்லை, அகம்படியனுக்கா என்ற கேள்வியை எழுப்பி, ஜாதிவெறியைக் கிளப்பி விட்டுவிட்டால் -?

ஆக்னியூ : ஊரே இரண்டுபட்டுவிடும், கலெக்டர் ஸார்! ஆம், ஜாதி வெறி பிடித்த இந்த மக்களை நாம் லகுவில் பிளவுபடுத்தி விடலாம். ஆனால் அந்த வெறியை எப்படி கிளப்புவது? அதற்கு ஒரு வழி வேண்டாமா?

லூஷிங் : வழி இருக்கிறது ஆக்னியூ! படமாத்தூர் உடையத் தேவன் என்று ஒருவன் இருக்கிறான். காலஞ்சென்ற முத்துவடுகநாதனுக்கு அவன் எப்படியோ ஏதோ தூரத்து உறவினனாம். என்னைக்கூட அவன் சந்தித்துப் பேசினான். சபலபுத்திக்காரன். அவனையே நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். சிவகங்கைச் சீமையின் வாரிசுரிமை மறவனுக்கே உரியது என்று கூறி, அவனை நாம் சிவகங்கைக்கு மன்னனாக்கிவிடலாம்.

ஆக்னியூ : அருமையான யோசனை! அப்படிச் செய்து விட்டால் ஊரில் இரண்டு கட்சிகள் தானே தோன்றிவிடும். ஒன்று உடையத் தேவன் கட்சி; மற்றது மருது

பாண்டியன் கட்சி. ஒன்று மறவர் கட்சி; மற்றது அகம்படியர் கட்சி! லூஷிங்டன்! இந்தத் திட்டத்தை நாம் உடனே நிறைவேற்றியாக வேண்டும்.

**லூஷிங்** : இந்தத் திட்டத்தை நீரேதான் நிறைவேற்றியாக வேண்டும். உமது திறமையில் எனக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு.

**ஆக்னியூ** : தாங்களும் இந்தப் பிரகடன வைபவத்தின்போது இருந்தால் மிகவும் நல்லது. இல்லையா?

**லூஷிங்** : இல்லை. எனக்கு அவசரவேலைகள் இருக்கின்றன. இங்கிருந்து எங்குமே நான் அசைய முடியாது. இந்தத் திட்டத்தை நீரே நாளை நிறைவேற்றி விடும். பிறகு மருதுபாண்டியனைக் காட்டிக் கொடுக்க நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள், இந்த முட்டாள் ஜனங்கள்.

**ஆக்னியூ** : அப்படியே செய்கிறேன், கலெக்டர் சார். நான் வருகிறேன்.

**லூஷிங்** : சரி, போய் வாரும்.

(ஆக்னியூ சலாமிட்டுப் போகிறான்).

(வாய்விட்டுச் சிரித்து) ஆம், இவர்களை - இந்தக் கறுப்பர்களை நாம் பிரித்துத்தான் ஆளவேண்டும். ஜாதி, மதம், நிறம், இனம், மொழி என்ற பேதா பேதங்களைப் பயன்படுத்திப் பிரித்தாள வேண்டும்! பிரித்தாள வேண்டும்! ஹஹ்ஹா! (பேய்த்தனமாகச் சிரிக்கிறான்).

- திரை -